**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**அ.வ.எண். 251/2024**

வாதி ராஜேஷ்வரி என்பவரின் வாக்குமூலம் (1869 ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ்வரி | சாதி | : | |
| கணவர் பெயர் | : | கணேசன் | சமயம் | : | |
| கிராமம் | : | அருப்புக்கோட்டை | தொழில் | : | |
| தாலுகா | : | அருப்புக்கோட்டை | வயது | : | 66 |

நாள் : 18.02.2026

வா.சா. 1– ராஜேஷ்வரி

**வாதி தரப்பு முதல் விசாரணை** :–

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை என்னுடைய தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

**வா.சா.ஆ.1** – 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் கிரையம் பெற்ற 22.08.2014 ம் தேதியிட்ட கிரைய ஆவண எண்.3993/2014 ன் சான்றிட்ட நகல்.

**வா.சா.ஆ.2** – வாதியும், 1 ம் மற்றும் 2 ம் பிரதிவாதிகளும் ஏற்படுத்திக்கொண்ட 10.05.2020 ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஒப்பந்தத்தின் அசல்.

**வா.சா.ஆ.3** – வாதியின் மகன் ரூபன் ஐசாக் வங்கி கணக்கில் இருந்து 1 ம் மற்றும் 2 ம் பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு 01.01.2022 முதல் 30.04.2022 ம் தேதிவரை பணம் அனுப்பியதற்கான வங்கி அறிக்கையின்(Statement of Accounts) சான்றிட்ட நகல்.

**வா.சா.ஆ.4** – 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் வாதிக்கு 21.04.2022 அன்று எழுதிக்கொடுத்த சம்மதப் பத்திரத்தின் அசல்.

**வா.சா.ஆ.5** – வாதி தன்னுடைய வங்கி கணக்கில் இருந்து எடுத்த 10.05.2022 ம் தேதியிட்ட DD No.500118 வரைவோலையை நிதி நிறுவனத்தில் செலுத்தியதற்கான வாதியின் வங்கி அறிக்கையின் சான்றிட்ட நகல்.

**வா.சா.ஆ.6** – வாதி DD மூலம் பணம் செலுத்தியதற்கான 10.05.2022 தேதியிட்ட counter ரசீதின் அசல்.

**வா.சா.ஆ.7–** வாதி 28.06.2022ம் தேதியிட்ட தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல்.

**வா.சா.ஆ.8–** 03.07.2022ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை நகர காவல் நிலையத்தில் இருந்து வாதிக்கு சார்பு செய்யப்பட்ட சம்மன்.

**வா.சா.ஆ.9–** 04.07.2022ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதிக்கு 1ம் மற்றும் 2ம் பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவண எண்.4464/2022 ன் சான்றிட்ட நகல்.

**வா.சா.ஆ.10–** வாதி 21.12.2022ம் தேதியிட்ட தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல்.

**வா.சா.ஆ.11 –** வாதி 21.12.2022ம் தேதியிட்ட தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பினை பெறாமல் திருப்பி அனுப்பிய அஞ்சல் கவர் அசல்.

தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.02.18 17:18:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.